ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# SRI VAISHNAVAN.

# ஸ்ரீ வைஷ்ணவன்.

உண்மையறிவை உணர்த்தும்

## ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

" எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு "

| தொகுதி 6. | 1106-ம் ஞூ<br>பிரஜோத்பத்தி௵ சித்திரை௴ | பகுதி 6. |
|---|---|---|


### நம்மாழ்வார் வணக்கம்

சநத்தமு மந்தருட் சகவாச மேயதிகம்
  சாத்விகாரி னேசமில்லே
தருமநெறி சேராத கருமநெறி யுற்றவன்
  றயிவென்ப தொன் றுமறியேன்
சந்தனவனத்த மருசுக்தமலர் யாவையுந்
  நாரியற்கிந்த லோபி
நன்மொழிக டெரியாது வன்மொழி சொலுங்கொடிய
  நாயினுங் கடையாயினேன்
இந்த விதமாக வென்சரி தங்கள் முழுவதும்
  மெள்ளறி விலாதிருக்க
என்ன பிழை செய்தாலு நீ பொறுத்தறிவிலா
  வெளியனுக்கருள் புரிந்து
செந்தமிழ் வாரணந் தந்தருள்மாற நின்
  செய்ய பதமுளரி தருவாய்
திரை பொருவு பொருநை யிருகரை மருவு குருகை வரு
  திருமருவு மகிழ் மாறனே.

ஸ்ரீ

# ஸ்ரீ வைஷ்ணவ தர்மம்.

## வைராக்கியம்.

(முன் 58-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு இராமாநுசர் சௌம்ய நாராயணன் சந்நிதியில் விழுந்து கிடக்கிறாரென்ற செய்தி நகர்முழுவதும் பரவலாயிற்று. அதிசீக்கிரத்தில் ஆயிரக்கணக்கான மாந்தர்கள் இராமாநுசரைப் பார்க்கக் கூடிவிட்டார்கள். எல்லோரும் இராமாநுசரது பரிதாபத்தான நிலையைக்கண்டு கண்ணீர் சொரிந்தார்கள். சிலர் இராமாநுசருக்கு இக்கொடிய விரதத்தை நியமித்த திருக்கோட்டியூர் நம்பிகளை ஈவு இரக்கமற்ற கல்நெஞ்சரென இகழ்ந்தார்கள். சிலர் இராமாநுசரது உயிரை மாய்க்கவே இந்த சூழ்ச்சி செய்யப்பட்டதெனக் கூறினார்கள். சிலர் உபவாசத்தின் கஷ்டத்தை நம்பிகள் அறியாரென வாதித்தார்கள். சிலர் நம்பிகளிடம் சென்று இராமாநுசருக்கு உயிர்ப்பிச்சை கேட்க எண்ணினார்கள். இவ்விதம் சாமானிய மனிதர்களால் நம்பிகள் குறை கூறப்படுவதை இராமாநுசர் கவனித்துத் திருவுள்ளம் பொறாது அவர்களை ஒன்றும் பேசாதிருக்கும்படி கைகை காட்டி வணக்கம் செய்தார். இந்நிலையில் சிறந்த பாகவதோத்தமரான ஓர் ஸ்ரீவைஷ்ணவர் இராமாநுசரது பரிதாபநிலையைக்கண்டு உள்ளம் பொறாதவராய் ஒரே ஓட்டமாய் நம்பிகளின் திருமாளிகையை யடைந்து, நம்பிகளின் திருவடிமலர்களுக்கு வணக்கஞ்செய்து நின்றார். அக்காலத்தில் நம்பிகட்கும் அவ்வைஷ்ணவருக்கும் நடந்த சம்பாஷணை பின்வருமாறு:—

நம்பிகள்.— பெரியவரே! என்ன அதிசயம்! மூச்சு இளைக்கிறது; வேர்வை கொட்டுகிறது. இவ்வளவு வேகமாய் வந்த காரியம் என்ன?

வைஷ்ணவர்:— ஸ்வாமி! எம்பெருமான் சொத்தில் ஓருயிர் மரணாபத்திலிருக்கின்றது. அது பொறாமல் அடியேன் தேவரீரிடம் ஓடிவந்தேன்.

நம்பிகள்:— என்ன காணும்! நீர் கூறுவது ஒன்றும் புரியவில்லை. ஓருயிர் மரணாபத்திலிருந்தால் அதற்கு யான் செய்யவேண்டியதென்ன? தெளிவாய்ச் சொல்லும்.

வைஷ்ணவர்:— தேவரீர் கட்டளைப்படி இராமாநுசர் சௌம்மிய நாராயணன் சந்நிதியில் உபவாசவிரதம் அனுஷ்டிக்கிறாரல்லவா? அவர் உபவாசமிருந்து இதுவரை பதினாறு தினங்கள் முடிகின்றன. இதற்குள்ளாக அவர் திருமேனி இளைத்து கண்குழியுண்டு நாவும் பசையற்று இருக்கவும் அசக்தராய் பிரேதம்போல் ஓர் பக்கத்தில் விழுந்துகிடக்கிறார். அவர் நிலைமை மிகப் பரிதாபமாயிருக்கிறது. ஆதலால் அவர்மீது தேவரீர் சற்று கருணை காட்டவேண்டும்.

நம்பிகள்:— ஒரு மாதம் உபவாசவிரதம அனுஷ்டிக்கும்படி யாம் இராமாநுசருக்குக் கட்டளையிட்டோம். ஆனால் இதுவரை பதினாறு தினங்களே முடிவாயிருக்கிறது. இன்னும் பதினான்கு தினங்கள் பாக்கியிருக்கின்றது. இந்நிலையில் யாம் என்ன செய்ய முடியும். ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே அவர் குறைநாளும் சுத்த உபவாச விரதத்தைக் கண்டிப்பாய் அனுஷ்டிக்க வேண்டியது தான்.

வைஷ்ணவர்:— அவ்விதமாயின் யாம் இராமாநுசரைப் பார்க்கமுடியாது. உபவாசத்தின் பலனால் இப்பொழுதே அவர் மரண மூர்ச்சையிலிருக்கிறார். ஆயிரக்கணக்கான மாந்தர்கள் அங்கு கூடி கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் இவ்வுபவாச விரதத்தைக் கண்டிப்பாய் அனுஷ்டிக்கிறதாயிருந்தால் இரண்டொரு தினங்களில் அவர் மரணமடைவாரென்பதில் சந்தேகமில்லை. நம் தர்ஸனத்தில் ஈடுபட்ட ஓர் சிறந்த பக்தருக்கு இத்தகைய மரணாபத்தை உண்டுபண்ணுவது நியாயமாகுமா?

நம்பிகள்:— என்ன காணும் நம் சம்பிரதாய உண்மைகளை நன்றாய் அறிந்திருந்தும் அறியாத பாமர மக்களைப்போல் பேசுகின்றீர். ப்ரபந்நனுக்கு மரண பயம் ஏது? நம் இராமாநுசர் இருந்தாலும் மேன்மை தான். இறந்தாலும் மேன்மை தான். அவர் இங்கிருக்கப் பெற்றால் அவர் விரும்பியபடி அறியவேண்டிய உண்மைகளை அறியாதிரார். அவ்விதமின்றி மேல் வீடு சென்றால் அங்கு ஆளவந்தாரிடத்தில் கேட்டறியா தொழியார். இரண்டு இடத்திலும் அவரது விருப்பம் கை கூடும். ஆதலால் ப்ரபந்நனுக்கு உபயவிபூதியிலும் நன்மையேயன்றி துன்பம் ஒருக்காலுமில்லையென்பது அறியத்தக்கது.

வைஷ்ணவர்:— ஸ்வாமீ! தேவரீர் கூறுவது உண்மையே. ஆயினும் நம் இராமாநுசருக்கு தற்பொழுது உயிர்ப்பிச்சை அளிப்பது அவசியமாகும். கிருபை கூர்ந்தருளல் வேண்டும்.

நம்பிகள்:— ஆயின் அதற்கு யாம் செய்யவேண்டியதென்ன? உபவாச விரதத்தை ஒழித்துவிட விரும்புகின்றீரா?

வைஷ்ணவர்:— இல்லை! இல்லை!! ஓர்நாளில் ஒரு கை தீர்த்தம் மட்டும் புஜிக்கும்படி நியமித்தருள வேண்டும். இவ்வளவு கிருபை செய்தால் அவருக்குப் பிராணாபத்து ஏற்படாது.

நம்பிகள்:— சரி, அவ்விதமே யாகுக. சீக்கிரம் போய் நமது கட்டளையை இராமாநுசருக் கறிவித்து இம்முறையில் குறை உபவாசத்தையும் முடித்து நம்மிடம் வரச் செய்வீராக.

இச்சம்பாஷணை முடிவுற்றதும் வைஷ்ணவர் இராமாநுசரிடம் விரைந்து வந்து நம்பிகளின் கட்டளையைத் தெரிவித்து அன்று முதல் ஒரு கை தீர்த்தம் மட்டிலும் இராமாநுசரைப் புசிக்கச் செய்தார். இவ்விதம் பதினொன்கு தினங்கள் கழிந்து உபவாச விரதம் முடிவுற்றது. இராமாநுசரது வைராக்கிய நிஷ்டையைக் கண்டு எல்லோரும் ஆச்சர்யப்பட்டார்கள். உபவாச விரதம் கழிந்த மறு தினமே இராமாநுசர் நம்பிகளை தரிசிக்கப் புறப்பட்டார். அப்போது தமது அந்தரங்க சிஷ்யரான கூரத்தாழ்வான், முதலியாண்டான் என்ற இருவரையும் கூட அழைத்துச் சென்றார். இவர்கள் மூவரும் நம்பிகளின் திருமாளிகையைச் சார்ந்து நம்பிகளின் திருவடிகளில் சாஷ்டாங்கமாய் விழுந்து சேவித்து கைகட்டி வாய் புதைத்து நின்றார்கள். அக்காலத்தில் நம்பிகளுக்கும் இராமாநுசருக்கும் நடந்த சம்பாஷணை பின் வருமாறு:

நம்பிகள்:— இராமாநுசரே! உமது உபவாச விரதம் விக்கினமின்றி முடிவு பெற்றதா?

இராமாநுசர்:— ஆம், தேவரீர் கிருபையால் முடிவுற்றது.

நம்பிகள்:— சரி, நீர் அஞ்சா நெஞ்சுடையவரென்பதும், ஐம் புலன்களையும் வெல்லும் ஆற்றலுடையவரென்பதும் நிதர்ஸனமாயறிந்தோம். நிரம்ப சந்தோஷம். இனி நம் உறைவிடமான அரங்கமா நகர்க்குச் செல்லலாம்.

இராமாநுசர்:— ஸ்வாமீ! ஓர் விண்ணப்பம்! தேவரீர் வாக்களித்தபடி உபவாஸ விரதத்தை முடித்து வந்தேன். இனி பிறவிப் பிணியைப் போக்கும் சிறந்த ஔஷதத்தை அடியேனுக்கீந்து ரக்ஷிக்கவேண்டும்.

நம்பிகள்:— என்ன காணும் யோசனையின்றிப் பேசுகிறீர். அவ் ஔஷதத்தைக் கேட்கும் உரிமை உம்மை விட்டு அகன்றுவிட்டது. இனி அந்த ஆசையை மறந்துவிடுவீராக.

இராமாநுசர்:— (நடுங்கி) ஸ்வாமீ! அடியேன் செய்த பிழை யாது? கிருபை கூர்ந்து தெரிவித்தருள்க.

நம்பிகள்:— நீர் நமது கட்டளையை மதிக்காமல் நடந்திருப்பது தெரியவில்லையா? நன்றாய் யோசித்துப் பாரும்.

இராமாநுசர்:— (கண்ணீர் விட்டு) அவ்விதம் ஒன்றுமில்லை ஸ்வாமீ! தேவரீர் நியமனப்படியே நடந்துவருகிறேன்.

நம்பிகள்:— கேளும் இராமாநுசரே! அன்று யாம உமக்கு என்ன கட்டளையிட்டோம். உபவாச விரததை முடித்தபின் நீர் ஒருவருமே தனிமையாய் எம்மிடம் வரும்படி நியமித்தோமல்லவா? நீர் அவ்விதம் செய்யாது உம்மோடு கூட இருவர்களை அழைத்துவந்திருக்கிறீர். இது எமது கட்டளையை அலக்ஷியம் செய்ததாக ஏற்படுகிறதல்லவா?

இராமாநுசர்:— ஸ்வாமீ! இச்சிறியேனது விண்ணப்பத்திற்கும் சற்று இடங்கொடுக்க வேண்டும். அன்று தேவரீர் திருவாக்கினின்றும் உதயமான வார்த்தைகள் அப்படியே அடியேனுடைய உள்ளத்தில் பதிந்து கிடக்கின்றது. அதாவது அடியேனது தண்டும் பவித்திரமும் நீங்கலாக வேறு எவரையும் அழைத்து வரலாகாதென்பதே தேவரீர் நியமித்த கட்டளையாகும். இக்கட்டளைக்கு அடியேன் மாறு செய்யவில்லை.

நம்பிகள்:— என்ன காணும் மெய் மறந்து பேசுகிறீர்! நீர் தண்டும் பவித்திரமும் கொண்டு வருவதில் எமக்கு ஆக்ஷேபமில்லை. அவ்விதமின்றி இவ்விரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்களை எப்படி அழைத்து வரலாம்?

இராமாநுசர்:— ஸ்வாமீ! இவர்கள் தாம் அடியேனுக்குத் தண்டும் பவித்திரமும் ஆவார்கள்.

நம்பிகள்:— என்ன காரணம் நீர் பேசுவது புதுமையாயிருக்கிறது. இவர்கள் எப்படி உமக்குத்தண்டும் பவித்திரமும் ஆவார்கள்.

இராமாநுசர்:— திரிதண்டம், பவித்திரம், காஷாயம் முதலிய சின்னங்கள் அவைகளைத் தரித்திருப்பவனது யோக்கியதையைக் குறிக்குமல்லவா? இவர்கள் அடியேனது உள்ளக்குறிப்பை யறிந்து பின்பற்றுபவர்கள். எங்கு சென்றாலும் இவர்கள் அடியேனை விட்டுப் பிரிகிறதில்லை அடியேனும் இவர்களை விட்டுப்பிரிகிறதில்லை உடல் மூன்றும் உயிர் ஒன்றும் போல் நாங்கள் இருக்கிறோம். ஆதலால் தேவரீர் நியமனப்படி தண்டும பவித்திரமுமாயிருக்கிற இவர்களுடன் வந்திருக்கிறேன்.

நம்பிகள்:— சரி, நன்றாயிருக்கிறது. இவர்களில்திரி தண்டம் யார்? பவித்திரம் யார்? சொல்லும்.

இராமாநுசர்.— முதலியாண்டான் திரிதண்டம். கூரத்தாழ்வான் பவித்திரம்.

நம்பிகள்:— சரி, இருக்கட்டும். இவர்கள் நல்லொழுக்கம் நிரம்பிய அறிவாளிகள் தானா?

இராமாநுசர்:—ஆம். எந்த அம்சத்திலும் இவர்கள் அடியேனைக் காட்டிலும் சிறந்தவர்களே.

நம்பிகள்:—இப்போது ஓர் நிபந்தனை விதிக்கின்றோம். அதற்குச் சம்மதிப்பீராகில் நீர் விரும்பும் ஔஷதத்தைப்பெறலாம். இல்லாவிடில் முடியாது. உமது சம்மதமென்ன? சொல்லும்?

இராமாநுசர்:—ஸ்வாமீ! தேவரீர் நியமனப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன். தயவுகூர்ந்து கிருபை செய்தருளவேண்டும்.

நம்பிகள்:— இராமாநுசரே! எம்மிடமிருக்கும் ஔஷதம் சாமானியமானதல்ல. பிறவிப்பிணியைப் போக்கி எம்பெருமானை யடையச்செய்யும். தகுந்த அருகதையுடையவர்களே இவ்வௌஷதத்தை உபயோகிக்கலாம். சாமானியர்கள் உபயோகிக்கலாகாது. இவ்வுலகில் இவ்வௌஷதத்தை உபயோகிக்கத் தகுந்தவர் கிடைப்ப

தரிது. ஆனால் நீர் இவ் ஔஷதத்தைப்பெற அருகதையுடையவரென்பதை யறிந்தோம். அதை இப்போது உமக்குக் கொடுக்கின்றோம். இவ்விருவர்களும் உமக்கு அந்தரங்க சீடர்களாயிருப்பதால் இவர்கள் நீங்கலாக வேறு எவர்க்கும் இவ் ஔஷதத்தைக் கொடுக்கலாகாது. கண்டிப்பாய் நீர் இந்நிபந்தனைக்குட்பட்டு நடக்கவேண்டும்.

இராமாநுசர்:— உத்தரவுப்படி நடக்கின்றேன் ஸ்வாமீ.

நம்பிகள்:—ஆயின் இங்கே வாரும். அவ் ஔஷதம் சாதாரணமான ஸ்தூலப்பொருளன்று. மந்திரரூபமாயுள்ளது. ஒலிவடிவம் பொருந்தியது. இம்மந்திரத்தைப் பக்தியுடன் உச்சரித்தால் நினைத்த காரியம் கைகூடும்.

எனக்கூறி இராமாநுசரைத் தமது வலப்புறத்திருத்தி நலந்தரும் சொல்லாகிய பெரிய திருமந்திரத்தை அவரது திருச்செவியில் உபதேசித்தருளினர். பசியன் சோற்றைக்கண்டாற்போல இராமாநுசரும் அம்மந்திரத்தைப் பெற்று அளவற்ற மகிழ்ச்சியடைந்தார். பின்னர் இராமாநுசர் நம்பிகளை வணங்கி விடைபெற்று சீடர்களோடு தமதிருப்பிடம் சார்ந்து அடியிற்கண்டவாறு ஆலோசிக்கலானார்.

ஆ! ஆ!! இவ்வளவு அருமையான மந்திரத்தை நம்பிகள் மிகப் பாதுகாப்பில் வைத்திருக்கிறார். யான் வெகு சிரமப்பட்டு இம்மந்திரத்தைப் பெற்றேன். இக்கலியுகத்தில் என்னைப்போல் சிரமப்படுபவர் கோடியிலொருவர்கூடக் கிடைப்பதரிது. ஆகவே இத்திருமந்திரம் பொதுமக்களிடம் பரவ மார்க்கமில்லாமலிருக்கிறது. இவ்விதமிருந்தால் இத்தரிசனம் அபிவிருத்தியாவதெப்படி? மக்களெல்லோரையும் எம்பெருமான் திருவருளுக்கிலக்காக்கிவைப்பதே ஆளவந்தாரின் திருவுள்ளக்குறிப்பு. அதை நிறைவேற்றிவைப்பது எனது முக்கிய கடமையாகும். அதற்கு இத்திருமந்திரத்தை சர்வசாதாரணமாய் எல்லோருக்கும் அறிவிப்பது அவசியமாகிறது. ஆனால் நம்பிகளின் நியமனத்தைக் கவனித்தாலோ இம்மந்திரத்தை ஒருவருக்கும் உபதேசிக்கலாகாது. இந்நிலையில் யான் என்செய்வது? இதைக் கூர்ந்து ஆலோசிக்கும்போது நம்பிகளின் நியமனத்தைக் கடந்து எல்லோருக்கும் உபயோககரமாகும்படி இத்திருமந்